

நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டை முத்துமாரியம்மன் கோயில் விழாவில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரையாற்றினார். உடன் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, நாகை வடக்கு ஒன்றியச் செயலாளர் என்.ஆனந்த் மற்றும் சார்பு அணிகளைச் சேர்ந்த என்.மோகன்தாஸ், கணேசன், செல்வம்நாட்டார், சி.நாகரெத்தினம், திருநாவுக்கரசு மற்றும் பலர் உள்ளனர்.



தர்மபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டிமேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பையர்நத்தம் முதல் கதிரிபுரம் வரை செல்லும் சாலையை சீரமைக்க வேண்டுமென்ற பொதுமக்கள் கோரிக்கையையொட்டி வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பரிந்துரையின் பேரில் பிரதமர் கிராமப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 1.61 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணியினை தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமையில்,ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் முன்னிலையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி தொடங்கி வைத்தார்.இந்நிகழ்ச்சியில் கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துக்குமார்,ஊராட்சிமன்ற தலைவர்கள் திருமலாதினேஷ்,சாந்தாகுப்புசாமி, கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### பேரறிஞர் அண்ணா 116வது பிறந்தநாள் விழா !

# அறந்தாங்கியில் அமைதி ஊர்வலம்! பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவிப்பு!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி ! சிவ.வீ.மெய்யநாதன் மரியாதை செலுத்தினர் !

புதுக்கோட்டை, செப். 20 -

பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாளையொட்டி புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கியில், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் மற்றும் கழகத்தினருடன் ஊர்வலமாகச் சென்று பேரறிஞர் பெருந்தகையின் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வுகளில் தேர்தல் பணிக்குழு செயலாளர் பரணிஇ.ஏ.கார்த்திகேயன், அறந்தாங்கி நகரக் கழகச் செயலாளர் க.ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே கலைமணி, ஒன்றிய கழக செயலாளர்கள் சக்தி ராமசாமி, பொன். கணேசன். எஸ்.எம்.சீனியார், கே.எஸ்.ரவி, எல்.குமார் (எ) துரைக் கண்ணு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், கீரமங்கலம் பேரூர் கழகச் செயலாளர் கே.சி. சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் பாத்திமா பீவி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் கருணாகரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### செய்தி மக்கள் தொடர்புத் துறையில் புதிதாக

# 2 வாகன ஓட்டுநர்கள் - 1 வாகன சீராளருக்குப் பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, செப். 20 -

தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் புதிதாக இரண்டு வாகன ஓட்டுநர்கள் -

கருணை அடிப்படையில் ஒரு வாகன சீராளர் ஆகியோருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இரண்டு வாகன ஓட்டுநர்கள், ஒரு வாகன சீராளர் என மூவருக்கும் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (18.9.2024) பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு நிறைவேற்றி வரும் திட்டங்கள், அறிவிப்புகள், அரசின் சாதனைகள், செய்தி வெளியீடுகள், அறிக்கைகள், வேண்டுகோள்கள் அனைத்தும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் அரும்பணிகளைத் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை மிகச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் , செய்தி மக்கள் தொடர்புத் துறையில் காலியாக இருக்கும் திருப்பூர் மாவட்ட ஓட்டுநர் பணியிடத்திற்கு ஆனந்தன், திருப்பத்தூர் மாவட்ட ஓட்டுநர் பணியிடத்திற்கு எம். தமிழரசு ஆகியோரையும், மதுரை மாவட்டத்தில் வாகன சீராளர் பணியிடத்திற்குக் கருணை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ள திருமதி.வெ.சித்ராதேவி அவர்களையும் பணி நியமனங்கள் செய்து உரிய ஆணைகளை தலைமைச் செயலகத்தில் நேற்று (18.9.2024) நேரில் வழங்கி, வாழ்த்துகள் கூறியதுடன் சிறப்பாகவும் பொறுப்பாகவும் பணிபுரியுமாறும் அறிவுரைகள் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் செயலாளர் வே.ராஜாராமன், மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் (செய்தி) எஸ்.செல்வராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

### கலைஞர் விட்டுச் சென்ற பல்வேறு திட்டங்களை

# தமிழ்நாடு முதல்வர் செய்து கொண்டு இருக்கிறார்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு!



செஞ்சி , செப் 20 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்த நாள் நிறைவு விழாவை முன்னிட்டு செஞ்சி பகுதிகளில் பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஏற்பாட்டில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இதில் கிட்டப்பார்வை தூரப்பார்வையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து அவர்களுக்கு இலவசகண் கண்ணாடி வழங்கும் நிகழ்ச்சி செஞ்சி திருவண்ணாமலை சாலையில் நடைபெற்றது .

நிகழ்ச்சிக்கு செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் முன்னிலை வகித்தார்.

நகர செயலாளர் கார்த்திக் அனைவரையும் வரவேற்றார் .

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு கண் கண்ணாடிகளை வழங்கி சிறப்புரை யாற்றினார் .

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்,

கல்விக்கண் திறந்த காமராஜர் என்று சொன்னதை போல் கண்ணொளி திட்டத்தை அறிவித்து ஏழை எளிய மக்களுக்கு கண்கண்ணாடியை வழங்கியவர் கலைஞர் என்றும் முதன் முதலில் மக்களுடைய கண் பார்வை சரியான முறையில் தெரிந்து கொள்வதற்காக பல்வேறு இலவச கண் சிகிச்சை முகாம்களை நடத்தி அறுவை சிகிச்சை செய்து அவர்களுக்கு கண்ணொளி திட்டத்தில் மூக்குகண் கண்ணாடியை வழங்கிய கலைஞர் சொன்ன திட்டங்களை எல்லாம் செய்துள்ளார் .

அந்த வகையில் கலைஞர் விட்டுச்சென்ற திட்டங்களையும் பணிகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார் அதையும் கடந்து ஐந்தாவது தலைமுறையாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வந்துள்ளதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் பார்வை குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழும் காலம் எல்லாம் கண்ணொளி திட்டத்தில் கண் கண்ணாடியை வழங்குவோம் என அவர் உறுதிப்பட தெரிவித்தார் .

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க. ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், பொருளாளர் நெடுஞ்செழியன். பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஜான் .பாஷா, சிவகுமார் , நிர்வாகிகள் மாவட்ட சிறுபான்மை பிரிவுஅணி அமைப்பாளர் அன்சாரி ,மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, மாவட்ட ஆதிதிராவிடர்நல அணி துணை அமைப்பாளர் சேகர், தொண்டரணி பாஷா கோகுல், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் .



வானூர் கிழக்கு ஒன்றியம், பூத்துறை ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவை முன்னிட்டு கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் அ.தி.மு.க, பா.ம.க, தே.மு.தி.க ஆகிய மாற்றுக் கட்சியினர் 250 நபர்கள் கழகத்தில் இணையும் விழா விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் பொன்.கௌதம சிகாமணி தலைமையில் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் பி.கே.டி முரளி வரவேற்புரையாற்றினார். ஒன்றிய குழுத் தலைவர் உஷா பி.கே.டி முரளி, ஒன்றியச் செயலாளர்கள் ராஜி, மைதிலி ராஜேந்திரன், நகர செயலாளர்.ஜெயமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நிகழ்ச்சியில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், செயற்குழு உறுப்பினர் கோ.பாஸ்கரன், ஒன்றியச் செயலாளர் கல்பட்டு வி.ராஜா, வே.கணேசன், மாவட்ட கவுன்சிலர்கள் அன்புமணி, கௌதம், ஒன்றிய குழு துணை தலைவர் பருவகீர்த்தனா விநாயகமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், ஒன்றிய நிர்வாகிகள் சங்கர், எத்திராஜ், ஏழுமலை, சங்கர், நாதமணி, சம்பத், ஊராட்சி மன்ற தலைவர் சேகர் (எ) உதயகுமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட மருத்துவர் அணி வினோ பாரதி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் லட்சுமி குருவேல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தேவேந்திரன், தகவல் தொழில்நுட்ப அணி விஜயகுமார், அரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.





புதுக்கோட்டை மாநகராட்சி வார்டு 10க்கு உட்பட்ட பகுதிகளில் வாக்கிங்வித்கோ எம்.எல்.ஏ. என்ற நிகழ்வில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து மக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார். இந்நிகழ்வின் பொதுமக்கள் குடிநீர் குழாய், தெருவிளக்கு, பழுத்தான மின் கம்பங்களை சீரமைத்தல், மாநகராட்சிக்குச் சொந்தமான தெருக்களில் உள்ள ஆக்கிர மிப்புகளை அகற்றி மீண்டும் அவற்றை மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டு வரவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை தெரிவித்தனர், மக்கள் தெரிவித்த புகார்களை அரசு அதிகாரிகளுக்கு எடுத்துரைத்து அவற்றை விரைவில் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார். உடன் 10வது வார்டு மாமன்ற உறுப்பினர் மை பால்ராஜ், வட்ட கழக செயலாளர் முருகேசன், வட்டப் பிரதிநிதி செல்லத்துரை ஜெயந்தி மார்ட்டின் கழக நிர்வாகிகள் கலையரசன் வடிவேல் கருப்பையா ஐயப்பன் விக்கி அப்துல்லா தினேஷ் மூர்த்தி மற்றும் கழக உடன்பிறப்புகள் நகராட்சி அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

### அ.தி.மு.க.வின் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளால் சீர்கெட்ட

# கூத்தா நல்லூர் பேருந்து நிலையம் ரூ.1.44 கோடியில் நவீன வடிவம்!

## திராவிடமாடல் ஆட்சியில் மக்கள் பயன்பாட்டிற்கு வந்தது!

திருவாரூர்,செப். 20 -

கழக ஆட்சியில் கட்டப்பட்டது என்கிற ஒரே காரணத்தால் பொதுமக்களின் கோரிக்கையையும் புறம் தள்ளி பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படாமல் அரசியல் காழ்ப்புணர்ச்சியால் கடந்த அ.தி.மு.க. அரசால் வீணடிக்கப்பட்ட கூத்தாநல்லூர் பேருந்து நிலையம், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் அவர்களின் தொடர் முயற்சியால் திராவிட மாடல் ஆட்சியில் நவீன வடிவமைப்பில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கூத்தாநல்லூர் நகரப்பகுதியில், போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், மக்கள் சிரமமின்றி பேருந்து பயணம் மேற்கொள்ளவும் பொதுமக்கள், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களிடம் பொதுமக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, கழக ஆட்சியில் கூத்தா நல்லூர் மத்தியில் அழகிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. அந்த பேருந்து நிலையம் அமைக்கப்பட்ட பின் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் விளைவாய் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு அந்த பேருந்து நிலையம் கழக ஆட்சியில் அமைக்கப்பட்டது என்கிற ஒரே காழ்ப்புணர்ச்சியால் அதனை பயன்பாட்டிற்கு கொண்டுவராமல் கிடப்பில் போட்டது.

தொடர்ந்து மக்கள் போராடியும் அப்போதைய அ.தி.மு.க. அரசு செவிமடுக்கததால் , புதிய பேருந்து நிலையம் மக்கள் பயன்பாட்டிற்கு வராமலேயே சிதிலமடைந்தது. கூத்தாநல்லூர் வட்டார மக்கள் திருவாரூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் பூண்டி கே.கலைவாணனிடம் வைத்த இந்த பேருந்து நிலைய கோரிக்கையை, தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களிடம் கொண்டு சென்ற நிலையில், ,அந்த கோரிக்கையை தாயுள்ளத்தோடு பரிசீலித்த முதல்வர் தளபதி அவர்கள் உடனடியாக கூத்தாநல்லூர் பேருந்து நிலையம் அமைய உத்தரவிட்டார்கள் .

அதன்படி பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ.அவர்களின் பெரும் முயற்சியால் கூத்தாநல்லூர் பேருந்து நிலையம் நவீன வடிவில் 1.44 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு, தற்போது திறப்புவிழா கண்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் பூண்டிகே. கலைவாணன் தலைமையேற்று இந்த புதிய பேருந்துநிலையத்தை திறந்து வைத்தார். நகர செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி, நகர்மன்ற தலைவர் பாத்திமா பஷீரா மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்த பேருந்துநிலையம் மீண்டும் பயன்பாட்டிற்கு வந்தமைக்கு தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கும் , சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் அவர்களுக்கும் பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

மேலும் கூத்தால்லூர் நகரப்பகுதிகளில் அப்துல் ரஹ்மான் சாலையில் அமைக்கப்பட்ட நியாய விலை கடை, மரக் கடை,லெட்சுமாங்குடி, மேலப்பனங்காட்டான் குடி ஆகிய பகுதிகளில் பயணிகள் நிழலகம், தொட்டாச்சேரி பகுதியில் உள்ள திருவாசல் குளம் புணரமைப்பு , நாகங்குடி குளம், சித்திக் நகர் பூங்கா ஆகியவற்றையும் , பெரிய கடைத்தெரு மற்றும் வண்டிப்பேட்டையில் தினசரி அங்காடி அமைக்க அடிக்கல்நாட்டி பணிகளையும் கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் முன்னிலையில் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவைத்தார்.

### சின்னசேலம் வடக்கு ஒன்றியத்தில்

# ரூ.5.36 கோடி மதிப்பில் 153 பேருக்கு கலைஞர் வீடு கட்டும் உத்தரவு!

## தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சின்னசேலம், செப். 20 -

கள்ளக்குறிச்சி மாவட்டம்,சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி,சின்னசேலம் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட ஏர்வாய்பட்டிணம், எலியத்தூர், தொட்டியம்,

பாண்டியங்குப்பம், திம்மாபுரம், நாககுப்பம் உள்ளிட்ட 11 ஊராட்சி கிராமங்களில் உள்ள 153 பேரை தேர்வு செய்து அவர்களுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் 2024 - 2025க்கான வீடு கட்ட உத்தரவு கடிதம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது,இதில் ஒன்றியக் குழு துணைத்தலைவர் அன்பு மணிமாறன் தலைமை தாங்கினார்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவிசங்கர், ரங்கராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பன்னீர்செல்வம் வரவேற்று பேசினார்.

வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதய சூரியன் கலந்து கொண்டு 11 ஊராட்சிகளைச் சேர்ந்த 153 பேருக்கு ரூ.5.36 கோடி மதிப்பில் கலைஞர் கனவு இல்லம் வீடு கட்டும் திட்ட உத்தரவு கடித நகலை வழங்கி தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர்,சமூக நீதிகாவலர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் பல்வேறு சாதனைகளை பற்றி பொது மக்களிடம் எடுத்துரைத்து பேசினார்.

இந்த நிகழ்வில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரங்கசாமி,தாஜ்தீன், ரேணுகா,ரேகா மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி செயலாளர்கள், பயனாளிகள்,கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.





புதுக்கோட்டை வடக்கு மாவட்ட, மாநகர தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையிலும், மாநகர செயலாளர் ஆ.செந்தில் முன்னிலையிலும் கழகக் கொடியேற்றி ஊர்வலமாக சென்று புதுக்கோட்டையில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட்டது. நிகழ்வில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், அக்ரி கணேசன், கே.ஆர்.என்.போஸ், க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, சுப.சரவணன், சு.சண்முகம், மேயர் திலகவதி செந்தில், என்.சாத்தையா, இராசு. சந்தோஷ், தவ . பாஞ்சாலன், மு.கா.ராமகிருஷ்ணன், ஆர்.ஆர்.சாமிநாதன், சி.சண்முகம், எம்.எம்.பாலு, இராம.செல்வராஜ், ஆர்.பாலகிருஷ்ணன், அ.ரெத்தினம், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வி.என்.எம்.பாலமுருகன், தவசுமணி, வே.ராஜேஸ், செந்தாமரை பாலு, சி.அரங்கநாயகம், எம்.சுப்பையா. கவிவேந்தன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய,மாநகர,பேரூர், கிளைக், வட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்,